

கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக கூட்ட அரங்கில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழி நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தங்க நகை பூங்கா அமைப்பது தொடர்பான கலந்தாய்வு கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் மரு அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மேலாண் இயக்குநர், அரசு முதன்மை செயலாளர் ஏ.கார்த்திக், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தொழில்துறை ஆணையர் எல்.நிர்மல் ராஜ், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன பொது மேலாளர் எஸ்.தனலிங்கம் ஆகியோர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் துணை மின் நிலைய அலுவலகத்தில் மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்தின் சார்பில் பல்லடம் மின் பகிர்மான வட்டம், காங்கேயம் கோட்டம், வெள்ளகோவில் உபகோட்டத்திற்கு உட்பட்ட 33/11 கேவி வெள்ளகோவில் துணை மின் நிலையம் 11 கேவி குருகத்தி பீடர் இருமுனை மின்பாதையில் இருந்து 24 மணிநேர மும்முனை மின்சார வசதியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, மேற்பார்வை பொறியாளர் (பல்லடம் மின் பகிர்மான வட்டம்) கே.கருணாகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.சந்திரசேகர், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகன செல்வம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில்

# ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு, மே 21-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-


ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்டத்தில் 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை குறித்து ஆலோசிப்பதற்கான மாவட்ட வழக்கறிஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் மூத்த வழக்கறிஞர் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி தலைமையிலும், மாநில வழக்கறிஞர் அணிகளின் நிர்வாகிகள் முன்னிலையிலும் வருகின்ற 29.5.2025-வியாழக் கிழமை அன்று காலை 10 மணியளவில் ஈரோடு மேட்டுக்கடை, தங்கம் மஹாலில் நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஒருங்கிணைந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் , வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் இரா. கோவிந்தசாமி
### மே 21 (1995)



**கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே உறுப்பினராகி, சாலவாக்கம் கிளைச் செயலாளராகி பணியாற்றி வந்ததுடன், அருகில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கழகக் கொள்ளைகளை விளக்கி நாடகங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து வந்தவர். தலைமைக் கழக பேச்சாளராக திகழ்ந்தவர்.**

**அறிஞர் அண்ணாவின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட இவர், உத்திரமேரூரில் 1965ல் தனது தலைமையில் மொழிப் போராட்டத்தை நடத்தி, ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றவர்.**

**மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவல் துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சோழிங்கநல்லூர் தொகுதியில் 4 புதிய விடியல் பேருந்துகள் தொடக்கம்!

சென்னை, மே 20 -

சென்னை தெற்கு மாவட்டம் - சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் ஒட்டியம்பாக்கத்தில் 4 புதிய விடியல் பேருந்துகளை பொதுமக்களின் கோரிக்கையின்படி, சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

சோழிங்கநல்லூர் தொகுதி புனித தோமையர் மலை ஒன்றியம் ஒட்டியம்பாக்கம் ஊராட்சியை உட்டிய ஊராட்சிகளின் பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

அக்கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் நேற்று முன்தினம் (19.5.2025 - திங்கள்கிழமை) ஒட்டியம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தடம் எண் 51C, சைதாப்பேட்டை, வேளச்சேரி வரை, வேளச்சேரி முதல் புதுப்பாக்கம் வண்டலூர் வரை என 4 விடியல் பயணப் பேருந்துகள் (வழி) கன்னிகாபுரம் வேளச்சேரி ரயில் நிலையம், நாராயணா புரம், ஒட்டியம்பாக்கம் ரோடு, சித்தாலப்பாக்கம், அரசன்கழனி, காரணை, புதுப்பா க்கம், புதுப்பாக்கம் கல்லூரி, வண்டலூர் கூட்ரோடு ஆகிய வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளை சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், மாநகர போக்குவரத்துக் கழக அதிகாரிகள், ஊழியர்கள், பொதுமக்கள் என பெருமளவில் கலந்து கொண்டனர்.

### “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு”

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் அரசின் சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்கள் வழங்கல்!

### மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட எடப்பாடி, சங்ககிரி மற்றும் மேட்டூர் சட்டமன்ற தொகுதிகளில், திராவிட முன்னேற்ற கழக அரசின் “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு!” சாதனை விளக்க பிரதிகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி தலைமையில், எடப்பாடி தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் நா.முருகவேல், சங்ககிரி தொகுதி பார்வையாளர் மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் ஆர்.பி.செந்தில்குமார், மேட்டூர் தொகுதி பார்வையாளர் மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா ஆகியோர் முன்னிலையில் வருகின்ற (24.05.2025 - சனிக்கிழமை) மற்றும் (25.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) மேற்குறிய இரு தினங்களிலும் பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) அனைவரும் கீழ்கண்ட பட்டியலில் உள்ள பொறுப்பாளர்களுடைய மேற்பார்வையில் வீடுவீடாக சாதனை விளக்க பிரதிகளை கொண்டு சேர்க்க வேண்டும்.

| வ. எண். | ஒன்றியம்/நகரம் | பொறுப்பாளர் பெயர் |
|---|---|---|
| 1 | சங்ககிரி கிழக்கு ஒன்றியம் | பி.தங்கமுத்து, மாவட்ட கழக அவைத்தலைவர் |
| 2 | சங்ககிரி மேற்கு ஒன்றியம் | |
| 3 | எடப்பாடி மேற்கு ஒன்றியம் | க.சுந்தரம், மாவட்ட கழக துணை செயலாளர் |
| 4 | எடப்பாடி கிழக்கு ஒன்றியம் | |
| 5 | கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம் | அ.த.சம்பத்குமார் மாவட்ட கழக துணை செயலாளர் |
| 6 | கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம் | |
| 7 | மேட்டூர் நகரம் | திருமதி.எஸ்.எலிசபெத்ராணி, மாவட்ட கழக துணை செயலாளர் |
| 8 | கொளத்தூர் ஒன்றியம் | பி.பொன்னுசாமி, மாவட்ட கழக பொருளாளர் |
| 9 | எடப்பாடி நகரம் | பி.எ.முருகேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 10 | நங்கவள்ளி வடக்கு ஒன்றியம் | மு.ராமநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 11 | நங்கவள்ளி மத்திய ஒன்றியம் | |
| 12 | நங்கவள்ளி தெற்கு ஒன்றியம் | |
| 13 | தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | ப.காமராஜ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| 14 | தாரமங்கலம் நகரம் | |
| 15 | மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம் | மு.சௌந்திரராஜன் பொதுக்குழு உறுப்பினர் |
| 16 | மகுடஞ்சாவடி வடக்கு ஒன்றியம் | |
| 17 | மேச்சேரி கிழக்கு ஒன்றியம் | எஸ்.பி.ரவிக்குமரன் பொதுக்குழு உறுப்பினர் |
| 18 | மேச்சேரி மேற்கு ஒன்றியம் | |
| 19 | இடங்கணசாலை நகரம் | என்.பழனியப்பன் பொதுக்குழு உறுப்பினர் |
| 20 | சங்ககிரி நகரம் | திருமதி.எஸ்.தங்கமணி பொதுக்குழு உறுப்பினர் |

அது சமயம் ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” திட்டங்கள் அடங்கிய பிரதிகளை பொதுமக்களிடம் சென்றடைய உறுதி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.,**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.




கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதி ஓசூர் மாநகராட்சியில் மாநில தேசிய நெடுஞ்சாலை திட்டத்தின் கீழ் ஓசூர் ஜி.ஆர்.டி முதல் சமத்துவபுரம் வரை 10 கோடியே 50 இலட்சம் மதிப்பில் புதிய சாலை அமைக்கும் பணியினை மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் தொடங்கி வைத்தார் . இந்நிகழ்ச்சியில் ஓசூர் மாநகர மேயர் சத்யா , துணை மேயர் ஆனந்த்ய்யா, மாதேஸ்வரன் , எல்லோரா மணி, செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.